www.padippakam.com



# காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...





## வரலாற்றுத் தொடர்

3

கி.மு. 3-ம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்கு வருவதற்கு முன் இந்து மதமும் இயற்கை வழிபாட்டு முறைகளும் அங்கே இருந்ததாக உறுதி செய்யப் பட்டுள்ளது. கந்தரோடை, பூநகரி, பொம்பரிப்புப் பகுதிகளில் கிடைக்கப் பெற்ற மிகப் பழமையான தொல்லியல் சான்றுகள் தாய்த் தெய்வ வழிபாடும், முருக வழிபாடும் அக்காலத்தில் இருந்ததைக் காட்டுகின்றன.[1] இந்த இரு வழிபாட்டு முறைகளும் தமிழர்களுக்கே உரித்தானவை என்பதும் குறிப்பிடத் தக்கது.

இன்று இந்து மதம் ஆரிய ரிஷிகளாலும், முனிவர்களாலும் உருவாக்கப்பட்ட நான்கு வேதங்களின் அடிப்படையிலும், தேவ



திருகோணமலையிலுள்ள இராவணன்வெட்டு

பாசை என்று ஆரியர்களால் விதந்துரைக்கப்பட்ட சமஷ்கிரத மொழியின் அடிப்படையிலும் இயங்குகின்ற மதமாக இருந்தாலும். அதன் தோற்றுவாய் என்பது திராவிட பெருங்கற்காலப் பண்பாடே. அப்பண் பாட்டுக் காலத்தில் நிலவிய இயற்கை வழிபாடு, நடுகல்வழிபாடு, தாய் தெய்வ வழிபாடு, இலிங்க வழிபாடு என்பனவே பிற்காலத்தில் சனாதன இந்துமத வழிபாடுகளாக மாற்றப்பட்டன.

## ஆரியர்களும் திராவிடர்களும்

ஆரியர்கள் ஐரோப்பாவிலிருந்து நாடோடிகளாக இடம் பெயர்ந்து இந்தியாவிற்குச் சென்ற காலத்தில் சிந்துவெளியில் இருந்த திராவிடர்கள் அவர்களை விட நாகரீகத்தில் கூடியவர்களாகவும் நிலையான அரசை உடையவர்களாகவும், கட்டிடக்கலை, நீர்ப்பாசனம், இரும்பைப் பயன் படுத்தும் தன்மை ஆகியவற்றில் உயர்ந்த அறிவு கொண்டவர்களாகவும் இருந்தார்கள். ஆரியர்கள் சமூகக் குழுக்களாக இருந்த காலத்தில் திராவிடர்கள் நிலையான அரசை உடையவர்களாக இருந்தார்கள். சிந்து வெளியில் திராவிடர்களை போரில் வென்ற ஆரியர்கள் பின்பு திராவிடர்களிடமிருந்து நிறையவே கற்றுக்கொண்டார்கள். இந்திரன், அக்கினி முதலாக விண்சார்ந்த மண்சார்ந்த 33 தெய்வங்களை வணங்கி வந்த அவர்கள், சிந்து வெளி யுத்தத்தின் பின் திராவிட வழிபாட்டு முறைகளையும், திராவிடத் தெய்வங்களையும் கூட சுவீகரித்துக் கொண்டார்கள். சிவன், மஹாதேவனானார். இடையர்களின் தெய்வமான கருமைநிறக் கண்ணன் மஹாவிஷ்ணுவானார். சிந்து வெளியில் ஆரியர்கள் தோற்றதோடு ஆரிய திராவிட யுத்தம் முடிவடைந்துவிடவில்லை. அது நீண்டகாலம் தொடர்ந்தது பற்றி புராண இதிகாசக் கதைகள் மூலம் அறிய முடிகிறது.

## அரக்கர்களான திராவிடர்கள்

தங்களை விட உயர்ந்த நாகரிகத்தைக் கொண்டிருந்த திராவிட அரசர்களை அரக்கர்கள் என்றும் அவர்கள் தெரிந்து வைத்திருந்த தொழில்நுட்ப அறிவை மந்திர தந்திர மாஜாயாலங்கள் என்றும், அவர்களுடன் தாங்கள் புரிந்த யுத்தங்களை தர்மத்தை நிலைநாட்ட நடந்த யுத்தங்களாகவும் ஆரியர்கள் கதை கட்டிவிட்டனர். இலங்கையில் நடந்த ஆரிய திராவிட யுத்தம், இராம – இராவண யுத்தமாகும்.

## இராவணன் ஒரு தமிழ் மன்னன்

இராவணேஸ்வரனை ஓர் அரக்கனாகவும், மாற்றான் மனைவியை அபகரித்துச் சென்ற நல்லொழுக்கம் இல்லாதவனாகச் சித்தரிக்கும் இராமாயணம், அவன் ஒரு சிறந்த சிவ பக்தன் என்று சொல்லியிருப்பது குறிப்பிடத் தக்கது. இலங்கையின் வரலாற்றுத் தொன்மை மிக்க சிவாலயமான திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தில் காணப்படும் இராவணன் வெட்டும், சீதையைக் கொண்டு சென்று சிறைவைத்த இடம் என்று குறிப்பிடப்படும் நுவரேலியா மாவட்டத்திலுள்ள சீதா எலியாவும், இராவணனது வரலாற்றை நினைவு கூரும் சின்னங்களாக இருக்கின்றன. இராமாயணக்காலம் கி.மு. 3000 வருடத்திலிருந்து 5000 வருடங்கள் இருக்கலாமென சில வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். இராவணனை ஆரியர்கள் அரக்கன் என்று சொன்னாலும் அவன் ஒரு திராவிட (தமிழ்) அரசன் என்பதும் அவனுடைய அரசு இலங்கையிலிருந்த பெருங்கற்காலப் பண்பாட்டிலிருந்து தோற்றம் பெற்ற அரசாக இருந்திருக்க வேண்டும் என்பதும் வரலாற்று உண்மையாகும். இராவணன் வழிபட்ட சிவ வழிபாடு என்பது ஆரிய மயப்படுத்தலுக்கு முன்பிருந்த சிவ(சைவ) வழிபாடாகும். அக்காலத்தில் திருக்கோணேஸ்வரத்தோடு, திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், சந்திரமௌலீஸ்வரம் (தெவிநுவரை) முதலான சிவாலயங்கள் இலங்கையில் இருந்துள்ளன. தீர்த்தக் கேணியுடனான ஆலய அமைப்பு, குளத்தையும், ஈமச்சின்ன முறையையும் தமது பண்பாட்டு அடித்தளமாகக்கொண்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்தது என்பது தொல்லியலாளர்கள் கருத்தாகும்.

## நடுகல் வழிபாடும் சிவவழிபாடும்

பெருங்கற்கால திராவிட மக்களால் வழிபட்ட நடுகல் வழிபாடே பிற்காலத்தில் சிவவழிபாடாக மாறியதாக சில அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். சிவபெருமானுக்கு சுடலை மாடன், சுடலையாண்டி என்னும் பெயர்கள் இருப்பதையும், அவரது கழுத்தில் மண்டையோட்டு மாலை இருப்பதையும், பிணங்களை எரித்த சுடுகாட்டு சாம்பலை அவர் நெற்றியில் பூசியிருப்பதாக சொல்லப்படுவதையும், அக்காலத்தில் பெரும்பாலான சிவன் கோயில்கள் மயானத்தில் அல்லது அதை அண்மித்த பகுதியில் கட்டப்பட்டிருப்பதையும் இவர்கள் அதற்கு ஆதாரமாக காட்டுகிறார்கள். தமிழ்நாடு சோழ புரத்தில் உள்ள 9ம் நூற்றாண்டு கல்வெட்டில் ஆதித்தன் என்னும் சோழ அரசன் அவன்தந்தை புதைக்கப்பட்ட இடத்தில் சிவன் கோயில் ஒன்றைக் கட்டியதாகக் குறிப்பிடுகிறது. அதேபோல் சித்தூர்மாவட்டம் தொண்டைமான் நாடு என்ற இடத்திலுள்ள கல்வெட்டு சோழ அரசன் முதலாம் ஆதித்தன் புதைக்கப்பட்ட.[3] பள்ளிப்படையின் மேல் சிவன்கோயில் ஒன்று கட்டப்பட்டதை சொல்கிறது. கீழ்ப்பாடி என்னுமிடத்திலுள்ள சோழேச்சுவரம் என்னும் சிவன்கோயிலில் உள்ள கல்வெட்டு இராஜராஜ சோழன் ஆற்றூர் போரில் உயிரிழந்தவர்களுக்கான பள்ளிப்படையில் அக்கோயிலைக் கட்டியதாகக் குறிப்பிடுகிறது. இதைவிட அக்காலத்தில் இறந்தவர்களை புதைத்த பின் எழுப்பப்படும் சமாதியில் சிவலிங்கத்தை வைக்கும் வழக்கம், வசதிபடைத்த தமிழ் நிலபிரபுக்கள் மத்தியில் இருந்ததாகவும் அறியப்படுகிறது. ஆரியர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட இன்றைய வைதீக இந்து மதத்திற்கு அப்பால் புனிதம் தீட்டு, துடக்கு, என்றெல்லாம் எட்டாத உயரத்தில் வைக்கப்படாத ஒன்றாக பாமர மக்களின் வாழ்வோடு ஒன்றிணைந்த வழிபாட்டு முறையாக சிவவழிபாடு அக்கால திராவிட (தமிழ்) மக்கள் மத்தியில் இருந்தது, சாதாரண மக்களிலிருந்து எந்த விதத்திலும் தங்களை வேறுபடுத்தாத "பூசாரி"களே அவ்வாலயங்களின் பூசகர்களாக இருந்ததும் அறிஞர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.[4]

இராவணன் காலத்திற்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட ஆரியக் கலப்பு குறிப்பாக வைதீக இந்துமதக் கலப்பு. இங்கிருந்த சைவ மதத்தை ஆக்கிரமிப்புச் செய்து கொண்டது. வைதீக சடங்குகளை நடாத்த சில வைதீக பிராமணர்கள் இலங்கைக்குச் சென்றார்கள். இவர்களைப் பற்றிய குறிப்புக்கள் மகாவம்சத்தில் காணப்படுகின்றன. இதைவிட இலங்கையில் கிடைக்கப்பெற்ற புராதன கல்வெட்டுக்களில் 22 கல்வெட்டுக்கள் பிராமணர்கள் பௌத்த சங்கத்திற்குத் தானம் வழங்கியதைக் குறிப்பிடுகின்றன.[5] இராவணனுக்குப்பின் முதலாவது பௌத்த மன்னனான தேவ நம்பியதீசன் காலம்வரை (கி.மு. 247-207) இல்ங்கையில் தென்பகுதி முழுவதும் இந்த வைதீக இந்து மதம் ஆளுமையுள்ள ஒரு மதமாக இருந்துள்ளது.

## நாகவழிபாடு

இவ்வாறு தென்பகுதியில் வைதீக இந்து மதம் ஆளுமையுள்ள மதமாக இருந்தபோது வட பகுதியில், குறிப்பாக குடாநாட்டில் நாக வழிபாடு நிலவியதாகச் சொல்லப்படுகிறது. அங்கே இருந்த அரசை "நாகதீப(ம்)" என்றே மகாவம்சம் குறிப்பிடுகிறது. சங்க காலத்தில் தோன்றிய ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை அதை "நாகநாடு" என்று குறிப்பிடுகிறது. இரண்டு நாக அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட சிம்மாசனப் போட்டியை தீர்த்து வைக்க கி.மு. 6ம் நூற்றாண்டில் புத்தர் இலங்கைக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. பொதுவாக இந் நாக வழிபாட்டை கைக் கொண்ட மக்களை நாகர்கள் என்றே மகாவம்ச ஆசிரியர் உட்பட பின்வந்த பலரும் அழைத்தார்கள் சிலர் இந்த நாகர்கள் மங்கோலிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்று நிறுவ முற்பட்டார்கள்.

1933ல் யாழ்ப்பாணத்தை சரித்திரத்தை எழுதிய முதலியார் செ.இராசநாயகம் அவர்கள் கூட "நாகர்கள்" மங்கோலிய வகுப்பைச் சேர்ந்த திபேத்திய தேவர்ம குலத்தவர்களென்றும் கி.மு.4000 ஆண்டுகளுக்கு முன்னரே மத்திய ஆசியாவினின்றும் இந்தியாவுக்கு வந்து குடியேறியவர்கள் என்றும் பின்பு அங்கு ஆரியர்களுடைய குடியேற்றம் அதிகரிக்க கிறிஸ்து பிறப்பதற்கு சில காலத்திற்கு முன் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் குடியேறியதாக குறிப்பிடுகிறார்.

உண்மையில் தட்டை மூக்கும் சிறு கண்ணும் மஞ்சள் நிறமும் கொண்ட இன்றைய இந்திய நாகலாந்து மாநிலத்தில் வாழும் இந்திய "நாகா" மக்களுக்கும், இலங்கையில் வாழ்ந்த நாக வழிபாட்டு மக்களுக்கும் இனவழித் தொடர்புகள் இருந்ததாகச் சான்றுகள் எதுவும் கிடையாது.

## இலங்கை நாகர்கள் தமிழர்களே

நாகவழிபாடென்பது அக்கால ஆசிய, ஆபிரிக்க அமெரிக்க பழங்குடி பழங்குடி மக்களிடையே பொதுவாகக் காணப்பட்ட ஒரு இயற்கை வழிபாட்டு முறையாகச் சொல்லப் படுகிறது. திராவிட நாகரீகச் சின்னங்களுள் மிகப் பழையதாகக் கருதப்படும் மொகஞ்சதாராவில் கண்டெடுக்கப்பட்ட சின்னங்களில் நாக வழிபாட்டுச் சின்னமும் ஒன்றாகும்.[6] இலங்கையில் வாழ்ந்த மக்களிடையே நிலவிய நாக வழிபாடும், சிந்துவெளி திராவிட நாகரீகத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிப் போக்கில் உருவெடுத்த ஒன்றாகவே கருத வேண்டும். பண்டைய சமூக அமைப்பில் இருந்ததாக சங்க இலக்கியம் குறிப்பிடும் பரதவர் ஆரியர் வேளீர் ஆயர், கள்ளர், மறவர், குறவர் போன்ற சமூகக் குழுக்கள் வரிசையில் நாக வழிபாட்டைக் கொண்ட சமூகக் குழுவும் ஒன்று என்றே கருதவேண்டும்.

**தீர்த்தக் கேணியுடனான ஆலய அமைப்பு, குளத்தையும், ஈமச்சின்ன முறையையும் தமது பண்பாட்டு அடித்தளமாகக்கொண்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் வழிவந்தது என்பது தொல்லியலாளர்கள் கருத்தாகும்.**

*1. ப.புஷ்பரத்தினம். ஈழத்தமிழர் வரலாறு.*

*2. ப. புஷ்பரத்தினம். ஆதிகால ஈழத்தமிழர் வரலாறு.*

*3. பள்ளிப்படை என்பது - பெருமைக்குரிய போற்றத்தக்க ஒருவர் இறந்தால் அவரை அடக்கம் செய்யுமிடத்தை குறிப்பதாகும். நித்திரை கொண்டார் என்பதை பள்ளி கொண்டார் என்று மரியாதையின் நிமித்தம் அழைப்பது போல், மதிப்புக்குரியவர்களை அடக்கம் செய்யும் இடத்தை பள்ளிப்படை என அழைப்பது அக்கால வழக்கம்.*

*4. க.ப.அறவாணன் - தமிழ் சமுதாய வரலாறு*

*5. ப.புஷ்பரத்தினம் - ஆதிகால இலங்கை தமிழர் வரலாறு*

*6. க.ப.அறவாணன் - தமிழ் சமுதாய வரலாறு.*

**- நக்கீரன்**

படிப்பகம்